**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் ஏற்றுமதியாளர்களுக்காக வழங்கப்பட்ட ஏற்றுமதி கடன் தொகையில் 2022 திசெம்பர் 31 இல் | அந்த கம்பனியிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 38,174,012 தொகை தற்போது செயற்படுகின்ற கம்பனியின் மூலம் | அறவிட வேண்டிய மீதிகளை விரைவாக அறவிடுவதற்காக தேவையான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறு 148 ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் ரூபா 38,174,012 ஆகும். அந்த தொகையில் 97 சதவீதம் அதாவது 36,978,012 தொகை 24 வருடங்கள் பழைய மீதியாக இருந்ததுடன் அது 147 ஏற்றுமதியாளர் களிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. மிகுதி 3 சதவீத பெறுமதி அதாவது ரூபா 1,196,000 தொகை 16 வருடங்கள் பழைய மீதியாக இருந்ததுடன் அது ஒரு ஏற்றுமதி யாளரிடமிருந்து அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது செயற்படாத கம்பனிகளிடமிருந்து அறவிட வேண்டிய கடனை பதிவழிப்பதற்காக கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சபை கூட்டத்தின் போது இணக்கப்பட்டின் பிரகாரம் நிதியமைச்சிற்கு உரிய கணனி பதிவழிப்பதற்கான அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் இரண்டு கம்பனிகளுக்காக ரூபா 1,450,743 ஏற்றுமதி கடன் வழங்கப்பட்டி ருந்ததுடன் அந்த இரண்டு கம்பனிகளினதும் பங்குகள் முதலீட்டுக்காக ரூபா 4,853,000 தொகை ஈடுபடுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த இரண்டு கம்பனிகளும் தற்போது செயலிழந்து மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு அந்த கம்பனிகள் இரண்டில் இருந்தும் அறவிட வேண்டிய பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 6,303,743 ஆகும். | சபையினால் பங்கு முதலீடு செய்யப்பட்டுள்ள மற்றும் ஏற்றுமதிக் கடன் வழங்கப்பட்டுள்ள இரண்டு கம்பனிகளும் தற்போது செயலிழந்து மூடப்பட்டுள்ள கம்பனிகளாக இருந்தமையால் தற்போது எடுக்கப்பட்டுள்ள சட்ட ரீதியான நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (இ) | ஊவாக பரணகம ஏற்றுமதி உற்பத்தி கிராமம் (UPEPV) நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 10,403,683 தொகை 2009 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக 13 வருட | தற்போது இந்த நிகழ்ச்சித் திட்டம் செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன் அதற்குரிய தகவல்களில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக தற்போது | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டி இருந்ததுடன் அறவிட முடியாத மீதிகள் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| காலத்தில் மீண்டும் அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | உரிய பணத்தை அறவிட முடியாதுள்ளது. | | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | சபையினால் மிகைப் பணத்தை முதலீடு செய்யும் போது நிதியமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் என்பன பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட முதலீகளின் கூட்டுமொத்தம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 53,490,411 ஆக காணப்பட்டது. | DHPL நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டிட வாடகை சபையினால் தமது வருமானத்தை தீர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு திறைசேரி நிதி ஏற்பாடு வரையறுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்காக தேவையான நிதியினை வழங்கும் நோக்கில் பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கின்ற நிதி ஏற்பாடு தவிர சபைக்கு கிடைக்கின்ற ஏனைய வருமானங்களில் மிகைப் பணம் மற்றும் மிகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஏற்றுமதியாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்யப்படும் வரை நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைப்பதற்கு பதிலாக வட்டி வருமானத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னர் ரூபா 53,490,411 தொகை நிலையான வைப்பு | நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | (Fixed deposits ) மற்றும் ரூபா 10,000,000 தொகை அழைப்பு வைப்பு (call deposits) என்பவற்றில் தற்காலிகமாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிலையான வைப்புப் பணம் மற்றும் வைப்புக்களுக்காக கிடைக்கின்ற வட்டிப் பணத்தைப் பயன்படுத்தி 2022 ஆம் ஆண்டில் கட்டிட வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு 12 மாதகால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூர அளவு ஓடியதன் பின்னர் அல்லது இதில் இரண்டு சந்தர்ப்பங்களில் முதலாவது வருகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் ஒவ்வொரு வாகனத்தினதும் எரிபொருள் எரிவு அளவு தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டிய போதிலும் சபைக்கு சொந்தமான 22 வாகனங்களுக்காக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | சபையினால் சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 218,857,086 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 211,709,684 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,147,402 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு முதலீடு மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளுக்கான இழப்பீட்டு மிகை நிதிஏற்பாடு ரூபா 137,038,488 இனால் அதிகாரித்தமை மற்றும் தொடர்புடைய கம்பனிகளின் இலாபப் பங்கு ரூபா 119,190,431 இனால் குறைவடைந்தமை என்பன பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையினால் 29 கம்பனிகளில் ரூபா 105,117,478 ஆன விடுவிக்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் மற்றும் 34 கம்பனிகளில் ரூபா 56,332,354 அன சாதாரண பங்குகள் என்பவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2005 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான 18 வருடகாலப் பகுதியின் முன்னுரிமைப் பங்குகளுக்காக எந்தவொரு இலாபப் பங்கும் கிடைக்காதிருந்ததுடன் 14 செயற்படு நிலையிலுள்ள கம்பனிகளின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 9,183,784 ஆன முதலீட்டுத் தொகைக்காகவும் எந்தவொரு இலாபப் பங்கும் கிடைத்திருக்கவில்லை. | சபையினால் விடுவிக்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கம்பனிகளில் இருந்து எந்வொரு இலாபத் தொகையும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்போது செயற்படு நிலையில் காணப்படுகின்ற போதும் இலாபப் பங்கு வழங்காக கம்பனிகளில் நிதி மற்றும் செயற்பாட்டு நிலைமைகள் தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் இலாப பங்கு வருமானத்தை சபைக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய இயலுமை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே சபையினால் அந்தக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு எடுக்கக்கூடிய தீர்வு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு தற்போதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் மேலும் குறிப்பிடுகின்றோம். | சொத்துக்கள் தொடர்பாக அகக் கூடிய நலன்களை பெறுகின்ற ஆக்கபூர்வமான முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் 487(4) ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிகளில் பங்குரிமையாளராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக சபையினால் | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு விடுவிக்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள் மற்றும் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யது தற்போது செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற கம்பனிகளுக்கிடையே | முதலீடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக காலரீதியிலும், செயற்திறனாகவும் முகாமைத்துவம் தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்னுரிமைப் பங்குகள் மற்றும் சாதாரண பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 89,469,028 தொகை முதலீடு செய்யப்பட்ட 28 கம்பனிகளின் பெயர்கள் கம்பனிப் பதிவாளரிடமிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கம்பனிச் சட்டத்தின் 487 ஆம் பிரிவின் கீழ் பதிவழிக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பாக 2007 இன் 07 ஆம் இலக்க சட்டத்தில் அமுல்படுகின்ற சந்தர்ப்பத்தில் இருந்து 06 மாத காலத்தில் புதிய இலக்கமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு கோர வேண்டியிருந்த சந்தர்ப்பத்தின் போது உரிக கம்பனி தொடர்பாக புதிய இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை மேற்கொள்ளப் பட்டிந்ததா என்பது தொடர்பாக கண்டறிவதற்கு முடியாதிருந்தது. சபையினால் மேலும் அந்த முதலீடு செய்யப்பட்டுள்ள கம்பனிகளில் பணிப்பாளர்களின் தரவுகளை சேகரித்து அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என மேலும் குறிப்பிடுகின்றோம். | |
| (ஆ) | சபைக்கு சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் 07 நிறுவனங்களுக்குக் கிடைத்த வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 901,000 இற்குரிய உடன்படிக்கை முடிவடைந்து 07 வருடங்கள் முதல் 24 வருடங்கள் வரையிலான கால வீச்சினைக் கடந்திருந்த போதிலும் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையினால் சேவைகளுக்காக கிடைத்த கூட்டுமொத்தமான ரூபா 901,000 ஆன 07 வைப்புக்களுக்குரியதாக வழங்கப்பட்ட சேவைகளுக்காக பெற்றுக் கொள்ளல் கலைக்கப்பட்டமையினால் மீண்டும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம் உரிய வைப்புக்களை மீண்டும் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதும் அதற்காக காணப்படுகின்ற நிச்சயமற்றதாக கருதி இழப்பீட்டு ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | அறவிட வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் காட்சிப்படுத்துவதற்காக துண்டுப்பிரசுரங்களை அச்சிடுவதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநருடன் 2021 ஏப்ரல் 07 ஆம் திகதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட வழங்குநர் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தவறியமையால் ரூபா 1,189,375 ஆன வரி இன்றிய கட்டளைப் பெறுமதியில் செலுத்தப்பட்ட முற்பணத் தொகை ரூபா 237,875 மற்றும் உடன்படிக்கையின் 3.6 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 300,000 கலைக்கப்பட்ட நட்டம் (Liquidated Damages) அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | இணையவழி மூலம் இவ்வாறு பௌதீக கலந்துரையாடல் நடாத்தி இந்த துண்டுப்பிரசுரங்களை தரத்தன்மையுடன் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் சபை எதிர்பார்த்த மட்டத்தில் கொண்டுவருவதற்கு தவறியிமை யினால் அந்த பணிகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை செய்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகையான ரூபா 237,875 இனை மீண்டு செலுத்துமாறு கோரப்பட்ட போதும் அவர்கள் அதற்காக நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக தற்போது உரிய சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் ஊடகப் பிரிவிற்கு புதிய விடியோ கெமரா மற்றும் டிஜிட்டல் SLR கெமரா என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 2.1 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் பெறுகை நடவடிக்கைகள் 2017 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் பல சந்தர்ப்பங்களின் போது பெறுகை தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அங்கத்தவர்கள் மாற்றப்பட்டமை, அந்த குழு செயற்படாமை மற்றும் | ஊடகப் பிரிவிற்கு புதிய விடியோ கெமரா மற்றும் டிஜிட்டல் SLR கெமரா என்பவற்றை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டின் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் முன்னால் நிலையான சொத்துக்களை கைப்பெற்றுவதற்காக காணப்பட்ட நிதியத்தின் பற்றாக்குறையினை கவனத்தில் கொண்டு காணப்பட்ட கெமரா தர | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்ட கால எல்லையில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுகைகள் குழு ஒழுங்குமுறையாக நடைபெறாமையின் காரணமாக பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. 2022 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு விடியோ கெமரா மற்றும் டிஜிட்டல் SLR கெமரா என்பவற்றின் பெறுமதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,385,500 ஆக இருந்ததுடன் பெறுகை நடவடிக்கைகளின் கால தாமதத்தின் காரணமாக பொருட்களின் விலை உயர்வடைந்து சென்றமையால் காணப்படுகின்ற எல்லையில் ரூபா 2,086,700 பெறுமதியான் டிஜிட்டல் SLR கெமரா மாத்திரமே கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தது. | நிலைமையினை அவதானித்து புதிய கெமரா கொள்வனவு செய்வதற்கு அந்த சந்தர்ப்பத்தில் முடியாமைக்கு முகாமைத்துவத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டு வரையில் காணப்பட்ட கெமராக்களில் காணப்பட்ட தொழில்நுட்ப வழுக்களை பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படாமையினால் 2022 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கெமரா தொகுதிகளுக்காக விடியோ மற்றும் நிலையான நிழற்படங்களைப் பெற்றுக் கொள்ளும் வசதிகளில் புதிய தொழில்நுட்ப வசதிகளையுடைய உயர் தரத்தைதை உடைய கெமரா ஒன்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வர்த்தக அமைச்சினால் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்கு 299 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 14 பேர் சபையின் பிரதான அலுவலகத்திற்கும், 16 பேர் சபையின் பிரதேச அலுவலகங்களுக்கும், 269 பேர் மிகுதி மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். அதில் பிரதான அலுவலகத்திற்கு நியமித்த உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய 285 உத்தியோகத்தர்களி னாலும் போதியளவான | அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது நிறுவனத்தின் தேவை தொடர்பாக எங்களுடன் எந்தவொரு கலந்துரையாடலும் மேற் கொள்ளாமல் உரிய வரிசை அமைச்சு ஊடாக அவ்வப்போது நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களுக்கு நியமித்தல் அரச நிருவாக அமைச்சு மற்றும் உரிய வரிசை அமைச்சின் விருப்பத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அளவு எங்களின் சேவை | மிகை உத்தியோகத்தர்களை வெற்றிடமுள்ள நிறுவனங்களுக்கு அனுப்புவதற்கோ அல்லது அந்த உத்தியோகத்தர்களை செயற்திறனாகவும் நினைத்திறனாகவும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடமைகள் நிறைவேற்றப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை. | தேவையினை விட அதிகமாக இருந்தமையினால் உரிய வரிசை அமைச்சு மற்றும் அரச நிர்வாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் 250 ஆக இருந்த போதும் உள்ளபடியான பதவி அணியினர் 176 ஆனமையால் 74 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடங்களில் உயர் முகாமையாளர் மட்டத்தில் 06 பதவிகள், மத்திய முகாமையாளர் மட்டத்தில் 17 பதவிகள் மற்றும் கனிஷ்ட முகாமையாளர் மட்டத்தில் 12 பதவிகள் காணப்பட்டன அதன் காரணமாக சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகமும் பதிற்கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தார். | உரிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |